உ

"வெற்றிவேலுற்றதுணை".

கூத்தாண்டை

யெனக் கூறும்

# இராவான் சிந்து.

இதில்

1. காவடிச் சிந்து
2. வண்ணச்சிந்து
3. முடுகு சிந்து

ஆய மூன்றுவிதமுள

இஃது

கோயம்பத்தூர்

அர்ச்சு மிக்கேல் ஐஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்

சிங்காநல்லூர்

**பாலகவி பாஸ்கரன்**

இயற்றியது.

---

**C. ஸ்ரீனிவாஸய்யரால்**

கோயமுத்தூர்

கிருஷ்ண விலாச அச்சாபீசில்

பதிப்பிக்கப்பட்டது.

அக்டோபர்

1910

REGISTRAR
JAN 191
MADRAS

## கவனிப்பு.

கனவான்களே!

வில்லிராவான் போர்க்களம், என்று மிக்கப் பெருமையாய்ப் பேசப்படுவதும் ஐந்தாம் வேதமாகிய ஜயம் எனப் பெயர் பெறும் ஸ்ரீ மகாபாரதத்திலுள்ளதுமான இவ்விடயம் கற்றோர்களால் பெரிதும் பூஷிக்கப்படுவது.

தற்காலம் வழங்கிவரும் வில்லி பாரதம், பெருந்தேவனர் பாரதம், நல்லாப்பிள்ளை பாரதம், அகஸ்திய பாரதம், ஹனுமத் பாரதம் ஆகிய இன்னும் பலவகையுள்ளவைகளில் இவ்விராவான் சரித்திரமும் பலவிதமாய் கூறப்படுகின்றது. ஆனால் இக்கடவுளைத் தெய்வமாகக் கொண்டாடுவோரின் கொள்கைக்கும், ஹனுமத் பாரதத்திலுரைக்கும் இன்னவரின் திருவிளையாடலுக்கும் அதிக சம்பந்தமிருப்பதால் யானுமதையே கைக்கொண்டன்ன். மெத்தத் துக்கத்தையே தரக்கூடியதாகவிருக்கும் இச்சரித்திரம் பலவகையாக வழங்கி வந்தபோதிலும் முடிவில் களபலியாவதாகிய பரிதாப விஷயத்தைக் கூறுமலிரா. ஆனதால் யாம் கதைப்போக்காகச் சில சமாசாரத்தை எடுத்துப் பேசி இராவானின் திருமணத்தோடு மங்களமாய் முடிவு செய்திருக்கிறேன். இவ்விராவானின் பராக்கிரமம் முழுவதையும் இயம்ப ஸ்ரீயப்பதியாகிய ஸ்ரீ கண்ணபிரானே தம்மாலசாத்தியமென்றிருக்க நம்மால் முடிவதோவக்காரியம்.

இப்படிக்கு
கற்றோர்க்கடிமை,
**பாலகவி பாஸ்கரன்.**



மெய்ப் பொருணமக்கு வெற்றியே யருள்க.

சுப்பிரமணியர் காவடிச் சிந்திலுள்ள
சாருசேர் கரும்பு ருசியாயிருப்பதென்றதனை வேருடனே தின்னுவது
நியாயமோ என்ற வர்ணமெட்டு.

## கணபதி துதி.

மலையரசன் மகளின் மைந்தா—மதனனை யெரித்த
மகாதேவனின் குமாரனே கஜானனா
மா பாரதம் வரைந்த மூல காரணா 1

## சரஸ்வதி துதி.

உண்டுபண்ணுகின்ற தொழிலுள்ள—கமலாசனின்
உத்தமியே வுன்னருளுதவம்மா—இராவான் சிந்து
உரைக்க நாவில் வந்து குடிகொள்ளம்மா 2

## ஆதி வரலாறு.

சுகனின் தந்தை வியாதனன்று—சொற்ற பஞ்ச வேதமாய
சுத்தமா பாரதக் கதையினுளே—ஆதிபருவம்
மெத்தக் கூறும் யாஞ்சொலு மொழியுளே 3

பாரதக் கதையிலுள்ள பாரமான விடயமெல்லாம்
யாராலே யெடுத்துரைக்க சாத்தியம்—ஆனாலுமதை
மாராம லியம்புவேனே சத்தியம் 4

## அவையடக்கம்.

சூரியன் முன்னே மின்மினி—சோபையதுபோலவேயென்
நாரிய புன்சொல்லையுமே கொள்ளுவீர்—பாரிலுள்ள
சீரிய கவிவல்லோரே தள்ளாதீர் 5

## பாண்டவர் வரலாறு.

——(o)——

உத்தமர்கள் மெத்த மெத்த வுச்சிமீது-வைத்து மெச்சும்
அத்தினாபுரியெனப் பதியுண்டு—சந்திர வம்சத்து
எத்தினை ராஜரதை யாண்டதுண்டு 6

பராசமுனி பாலனாய வேதம் வகுத்த முனியின்
திருவருளினாலே பாண்டுதித்தனன்—துர்வாசமுனி
கருணையினால் பாண்டவர் பிறந்தனர் 7

பாண்டவர்களைவரும் பாஞ்சாலியெனும் பொற்கொடியை
பத்தினியாய்ப் பார்த்தொழுகுந் நாளிலே-நாரதப்பிர்ம்மம்
பத்தியாய் பிரவேசமாகும் போதிலே 8

தீப்பிறந்த துரௌபதையை யாண்டொருவராகனின்று
அணைவதே தருமமெனச் சாற்றினர்—மற்றவர் காணில்
தீர்த்த யாத்திரை போவதெனச் செப்பினர் 9

முரசுக்கொடி தனையுடையோன் முற்றும் மனு முறைப்படியே
அரசியற்றிருக்குமந்தநேரமே—அந்தணனோரான், ஆ
நிறை கவர்ந்தார் வேடரென்றான் கோரமே 10

அர்ச்சுன னம்மொழியறிந்து தக்ஷணமா நிறை மீட்பான்
கர்ச்சித் தாண்மனே சென்றான் பாருமே-காண்டீபங்கொள்ள
இச்சித்துச் சென்றான் சுத்த வீரனே 11

அந்தகன் குழுவியுட னாணங்கு அன்பு மிஞ்சி
சிந்தையாய் மருவினின்ற கோலமே—மனந்தளரச்
சந்தித்தான் தனஞ்செயனுங் காணுமே 12

கண்டதிற் கவலைகொள்ளா கடுகவே காரியமாக
காண்டீபங்கை கொண்டு சென்றான் காளையும்-வேடுவர்களை
தண்டித்துப் பசு கொணர்ந்தா னன்னாளையும் 13

தவமுனி தன் சொற்படியே தீர்த்தயாத்திரை செய்யவேதான்
சுவேதவாகனன் சென்றான் சீரதாய்—பாவந் துலைக்கும்
பாகிரதியை யடைந்தான் பண்பதாய் 14

## அர்ச்சுனன் நாககன்னிகையாய உலூபியைக் கண்ணுறல்.

———

ஷை சிந்திலுள்ள வன்னத் தினைமாவைத் தெள்ளியே
என்ற வர்ணமெட்டு.

வேறு

கடவுள் மா நதிகங்கை நண்ணியே-கிரீடி
பவம் போகவதில் ஸ்நானம் பண்ணியே-இருக்கும்
போது வந்தாள் நாக கன்னியே-எழில்
உலூபிப் பெயரவளும் பல
சேடிச் சனமும் பின் வர
வந்து நீராடினள் கங்கையில்-உயர்
பந்து நிகர் கொங்கை மங்கையாள் 15

வில் விஜயன் காம நேட்கை கொண்டானே-நாக
நல மங்கையும் மோகங் கொணடாளே-பின்னர்
இருவரும் கேண்மையிற் பட்டாரே-மற்றும்
பிலத்தின் வழி பிரியாதவர்
பணி நாயகன் படர்கின்ற வூர்
பற்றினர் பரிவுடன் பாரடி-ஏர்
சிற்றிடை மாதின்னங் கேளடி 16

இரதியினு மதி வழகுள்ளவ-ளுடன்
மதனுகமப்படி யன்னவன்-சுரத
கேளியிற் மனமொத்திருந்தனர்-அதி
சம்பிரமத்துட னின்பமாகவே
சம்பிரதாயமாய் சையோகத்திருந்
தாவி யொன்ருனவ ரென்னவே-அடி
காவி மலர் சூடும் அன்னமே 17

மனமொத்த விருவரின் சேர்க்கையால்-கன
தன மூடையாள் கரு தாக்கினள்-பெற்ற
தாய் தந்தை மாரிதை நோக்கினர்-நிறை
வழகும் மிக பலமுங் கொடு
கழலுங் திறலெவர்க் குண்டென
காளை யிராவானுதித்தனன்-அந்
நாளை யிமையோர் களித்தனர் 18

## வில்விராவானின் வீரத்தன்மை.

ஒருதுறை வண்ணச்சிந்து.

மந்தமாருதந்தணல் வீசுதே, என்றவர்ணமெட்டு.

வில்விரவானுமுதித்தனன்—வீரப்பணிக்குலந்துள்ளினர்,
அனீதஞ்செய்தொழிலினரஞ்சினர்,
கல்லா
மழலை மொழியது மொழிந்து விளையாடி 19
நிழலைப்பார்த்ததைப் பிடிக்கத்தான் ஓடி.

உத்தமமான குருவினிடம்—உற்றபலகலை கற்றுமே,
உயர்ந்தோனிவனெனப்பெற்றுமே,
அவ
மதித்தவரசரை மிதித்துமவரைத்தன்
கதித்தவுரத்தால் சம்மதிக்கச்செய்தனன் 20

தனக்கொருப்பெவருமிலையெனத்—தான்சிறந்தான் மூவாராண்டிலே
மனமகிழ்ந்தார் பாண்டுசேயரே,
பெரும்
அஸ்திர சஸ்திர மதிகமுடையவன்
முஷ்டி சண்டையிற்மிக்கப்பெரியவன் 21

இவ்விதமிராவானிருக்கவும்—செம்மைசேர் பாண்டவர்சூதினால்
பங்கமடைந்தாரென்றார் பினால்
முழு
ஈராறுவருடமிருள் வனத்திலும்
ஈராறுமதியமாள் மறைந்திருத்தலும் 22

ஆனபின் முடிவில் முகுந்தனை—தூதனுப்பிப்பங்கு வேண்டினர்
அவர்தாரதில்லை யெனச்சாடினர்.
பின்னர்
குருக்ஷேத்திரஞ்சென்று குரூரமாய
மிகுக்ஷாத்திரங்கொடுசமர் செய்வதென்னவே 23

## இராவான் கத்திதீட்டுதலும்
## கிருஷ்ணன் அவரைச்சந்தித்தலும்.

ஷை சிந்திலுள்ள சுந்திரமிகுந்த குழல்மேகம் என்ற வர்ணமெட்டு
வேறு

எண்ணிக்கொண்டிருக்குமந்தநேரம்—இச்
சங்கதியறிந்திராவானந்நேரம்—உடை
வாள்தீட்ட மெண்ணி மிகப்பாரம்
ஆன நாகம்
மீதில் பாதம்
கொண்டு வாள்கூறுக்கினின்றான் தீரம் 24

ஆயர்பாடியிலுதித்த மாயன்—காயாம்பு
வண்ணநிறமுள்ளனலகாயன்—அந்
நெறியில் நெருங்கினானுபாயன்
பக்தர் நேயன்
துஷ்டர் காலன்
நீ யாரென வினவினானிச்சேயன் 25

கண்ணன் களிகொண்டு பதிலாக—விறல்
திண்ணியதோளுள்ள திறலாளா—யான்
எண்ணரிய யதுகுலத்துதித்தோன்
கதித்தோன்
மதித்தோன்
நீயேது வாள் கூருக்குவது என்றான் 26

மா பாரதயுத்தந் தொடங்கும்போது—யென்
னபாரவிறல் காட்டெண்ணியிப்போது—இவ்
வாள் கூருக்கினேனின்னினப்போது
அதையோது, நீ
மிகச் சாது
யென்று வினவிடை விண்டனனப்போது 27

**நல்லதங்காள் நாடகத்தில்,**

என்னுடன் பிறந்த தங்காள் இங்கு வந்தனளே என்ற வர்ணமெட்டு.

வேறு

மாதவனதை மனமுடனே மகிழ்ந்துமே கேட்டு
பலமிகுதியைப்பார்த்து
பிரியவிடையுமேற்று
குந்திமைந்தருகந்தவிடங் குருகியேபோனான் 28

கௌரவருஞ்சமர் தொடங்கபலிவேண்டுமென்று
மூவருண்டென்று
எற்றவரெவரென்று
வில்லிரவானிடமே வந்து வேண்டினான் துரியோன் 29

தந்தைவேண்ட தனையனுமேதான் சம்மதித்து
காயம் நிலையலயெனமதித்து
நானுயிர் நிலைத்து
இருப்பேனாகில் வருவேனென்றானின்பமாயுரைத்து 30

பார்த்த சாரதியிதை பரிவுடனறிந்து
பகைமொழி மொழிந்து
பட்சமொன்றொழிந்து
இருகிரகமும் சேருமமாவாசை யின்றென்றான் 31

மைந்தன் சொல்லின் மகிமைகளை மன்னவர் மதித்து
பலிதங்களுக்கெனமுடித்து
மணஞ்செய நினைத்து
பூலுவர்தங் குலத்திலுற்ற பூவையை வேட்டார் 32

மன்மதனும் ரதியுமென மனமொருமித்து
மணமக்கள் ரமித்து
வள்ளற்றனம் பெருத்து
கடவுளான கண்ணன் கழல் கருத்தினில் நினைத்து
இருந்தான் 33

இச்சிந்து சொன்ன பாலகவிபாஸ்கரனாரும்
அச்சிவிட்ட ஸ்ரீனிவாசனாரும்
அம்புவியிலுள்ளாரும்,
அச்சுதன் அநுக்கிரகத்தால் அநுதினமும் வாழியே, 34
(சுபம்).

மெய்ப்பொருணமக்கு வெற்றியேயருள்க,

கோயமுத்தூர்
கிருஷ்ண விலாச அச்சுயந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.